SRI LANKA

**இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்**

# மட்டம் III பரீட்சை – ஜூலை 2021

# பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

# (303) நிதிக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும் (FCA)

**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்**
இல, 540, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நாகிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05
தொ.பே - 011 2 559 669

**கல்வி மற்றும் பயிற்சி பிரிவின் வெளியீடு**

# இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்

# மட்டம் III பரீட்சை – ஜீலை 2021

# (303) நிதிக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும்

# பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(மொத்தம் 20 புள்ளிகள்) **பகுதி - A**

***வினா 01 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :***

*அத்தியாயம் 04 - உறுதியுரை பணிக்கமர்த்தலும் தொடர்புபட்ட சேவைகளும்*

**(a) நியாயமான உறுதிப்பாடு மற்றும் வரையறுக்கப்பட்ட உறுதிப்பாட்டுக்கு இடையிலான வேறுபாடுகள்**

| நியாயமான உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல் | வரையறுக்கப்பட்ட உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல் |
|---|---|
| பயிற்சியாளர் நியாயமான முடிவுரைகளை வரைவதற்கு போதுமானதும் பொருத்தமானதுமான சான்றுகளை சேகரிப்பார். | பயிற்சியாளர் வரையறுக்கப்பட்ட முடிவுரைகளை வரைவதற்கு போதுமானதும் பொருத்தமானதுமான சான்றுகளை சேகரிப்பார். |
| இனங்காணப்பட்ட பொருத்தமான பிரமாணங்களுடன் கூடிய அனைத்து பொருண்மையான அம்சங்களிலும் விடயதானமானது அனுசரிக்கின்றது என முடிவுசெய்யும் | இனங்காணப்பட்ட பொருத்தமான பிரமாணங்களுடன் கூடிய விடயதானமானது சூழ்நிலைக்கு மட்டும் பிரயோகிக்கக்கூடியதாகும் என முடிவுசெய்யும் |
| ஒரு நேர்மறையான சொல்லாக்கப்பட்ட உறுதிப்பாட்டு அபிப்பிராயத்தை வழங்கும். | ஒரு எதிர்மறையான சொல்லாக்கப்பட்ட உறுதிப்பாட்டு அபிப்பிராயத்தை வழங்கும். |
| போதுமானதும் பொருத்தமானதுமான சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்காக மிகவும் முழுமையான செயன்முறைகளை நிறைவேற்றும் - கட்டுப்பாடுகளின் பரிசோதனை மற்றும் கணிசமான கணக்காய்வு செயன்முறைகள். | கணக்காய்வானது நடுத்தர அல்லது குறைந்த அளவிலான உறுதிப்பாட்டை வழங்க முடியும்- குறைவான நடைமுறைகளை நிறைவேற்றும். |

*(03 புள்ளிகள் )*

**(b) உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல்கள்**

1. நிதிக்கூற்றுக்களின் விசேட நோக்கங்கள் மீதான உறுதிப்பாடு
2. நிதிக்கூற்றுக்களை மீளாய்வுசெய்தல்
3. உள்ளக கட்டுப்பாடுகளின் போதுமான தன்மை மீதான உறுதிப்பாடு
4. சூழல் விடயங்கள் மீதான உறுதிப்பாடு

5. ஒழுங்குவிதிகளுடனான இணக்கப்பாடுகள் மீதான உறுதிப்பாடு
6. முறைமை நம்பகத்தன்மை அறிக்கைகள்
7. நிறுவன ஆளுகைக் கோட்பாடு மீதான உறுதிப்பாடு
8. இடர்முகாமைத்துவம் மீதான உறுதிப்பாடு

*(02 புள்ளிகள்)*
*(மொத்தம் 05 புள்ளிகள்)*

## *வினா 02 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அத்தியாயம் 1 - வணிகச் சூழலும் ஆளுகைச் சட்டக கட்டமைப்பும்***

**செயன்முகைாமைக் கோட்பாடு மற்றும் முகவராண்மைக் கோட்பாடு என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகள்**

ஒரு நபர், இன்னொரு நபர் சார்பாகக் கொண்டுள்ள கடமைகளை நிறைவேற்றும்பொழுது முகவராண்மை இடம்பெறுகின்றது. முகவராண்மைக் கோட்பாடானது ஒரு கட்சியினர் இன்னொரு கட்சியினருக்கு முடிவெடுக்கும் அதிகாரத்தை வழங்கும் போது இருவருக்குமிடையிலான உறவை நோக்கியதாகும். முதல்வரால் வழங்கப்பட்ட தீர்மானமெடுக்கும் அதிகாரத்தின் அடிப்படையில் கட்டணம் அல்லது ஊதியத்தை பரிமாற்றாகக் கொண்டு முதல்வரின் முதலீட்டு நலன்களை அதிகரிப்பது முகவரின் பொறுப்பாகும்.

நிறுவனத்தின் வளங்களை சிறந்த முறையில் பாதுகாக்கும் பொறுப்பானது வளநிர்வாகப் பொறுப்பு அல்லது செயன்முறைக் கோட்பாடாகும். வள நிர்வாகப் பொறுப்பாளர் என்பவர் இன்னொரு நபரின் சொத்துக்களை முகாமைப்படுத்துவதற்கு நம்பகத்தன்மையுடைய நபராவார். உதாரணமாக விடுமுறைக்கு வெளிநாடு சென்ற உரிமையாளரின் சொத்துக்களை பராமரிப்பதற்கு இன்னொருவருக்கு கொடுப்பனவு செய்தல். ஒரு நிறுவனத்தினது அல்லது மற்றவர்களது நம்பகத்தன்மையுடைய குறிக்கோள்கள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக நபர்களை உள்ளார்ந்தமாக ஊக்கப்படுத்தும் செயற்பாடே இக்கட்டமைப்பு என வாதிட முடியும்.

*(மொத்தம் 05 புள்ளிகள்)*

## *வினா 03 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அத்தியாயம் 5 - இடர் மதிப்பீடு மற்றும் கணக்காய்வு செயன்முறை***

**(a) செயற்பாட்டு இடர்**

செயற்பாட்டு இடர் எனப்படுவது கொடுக்கப்பட்ட களம் அல்லது நிறுவனத்தின் நாளாந்த வணிக செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது நிறுவனம் முகம்கொடுக்கின்ற நிச்சயமற்ற தன்மை மற்றும் ஆபத்துக்கள் ஆகும். பொழுதுபோக்குத்துறையானது கோவிட் -19 பரவல் காரணமாக மிகவும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. AB PLC ஆனது பொழுதுபோக்குத்துறை சார்ந்ததாக காணப்படுவதால் உயர் செயற்பாட்டு இடரை எதிர்கொள்ள முடியும்.

- உச்சக்கட்ட காலங்களில் நிறுத்திவைக்கப்பட்ட செயற்பாடுகளிலிருந்தான குறிப்படத்தக்க திரவத்தன்மை மற்றும் காசுப்பாய்ச்சல்களின் இடர்கள் மற்றும் மீளப்பெறுகைகளில் தாமதம்
- பிற்போடப்பட்ட முதலீட்டுசெலவுகளால் நீண்டகால வளர்ச்சியில் தாக்கம்
- முன்பதிவுசெய்யப்பட்டவைகள் விரிவுபடுத்தப்பட்ட போக்குவரத்து தடையினால் ரத்துசெய்யப்படும்
- ஊழியர்கள் மற்றும் விருந்தினர்கள் மீதான சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரித்தமை.
- விநியோகச்சங்கிலியில் இடையூறு
- சுயதனிமைப்படுத்தலால் எதிர்பாராத ஊழியர் பற்றாக்குறை
- வருமானக்குறைவினால் ஊழியர் சம்பளக்கொடுப்பனவில் ஏற்பட்ட பாதிப்பால் திறன் ஊழியர்களின் வருவாய் வீதம் அதிகரித்தல்
- அரச சுகாதார விதிமுறை காரணமாக சாதாரண கொள்ளளவிலும் குறைவாக செயற்படுத்தல் மற்றும் விருந்து மண்டபத்தை பயன்படுத்த இயலாமை
- குறைந்த வருமானம் காரணமாக காசு முகாமைத்துவத்தில் அழுத்தங்கள்
- முதலீடுகள் குறைக்கப்பட்டமை மற்றும் கடன் பெற்றுக்கொள்வதில் தடைகள்
- கடுமையான உணவுப்பாதுகாப்பு வழிமுறைகள் மற்றும் தனிநபர் பாதுகாப்புக் கருவிகளுக்காக மேலதிக ஊழியரின் தேவைப்பாடு
- செயற்பாட்டு செலவுகள் அதிகரித்தமை (குறைந்த ஊதியக் கொடுப்பனவு, விலைவாசி, வாடகை, உணவு வழங்கல்)
- ஏனைய பிரிவுகளில் தங்கியிருத்தல் அல்லது அவற்றிலிருந்து சுதந்திரமாக செயற்படல் (விமான சேவை, கொள்வனவு வழங்கல், சுற்றுப்பயண வழிகாட்டி).

### (b) இணக்க இடர்

இணக்க இடர் என்பது முக்கிய சட்டங்கள் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க தவறுதல் ஆகும். விதிகளுக்கு இணங்கத் தவறியதன் விளைவாக தண்டப்பணச்செலவினால் ஏற்பட்ட நட்டத்தை குறிப்பிடமுடியும். சில நிறுவனங்கள் அவற்றுகென காணப்படும் குறிப்பிட்ட இடர் காரணமாக விசேட ஒழுங்குவிதிகளால் எல்லைப்படுத்தப்பட்டுள்ளன.

- நிபந்தனைகளின்படி முடிவுத்திகதியினுள் செலுத்தப்படாத கடன் தவணைக்கட்டணங்கள்.
- வருமானம் மற்றும் ஏனைய வரிக்கொடுப்பனவுகளில் தாமதம் ஏற்படல் அல்லது செலுத்த தவறுதல்
- ஊழியர் தொடர்பான கொடுப்பனவுகளுக்கு இணங்குதல்
- சுகாதார பிரச்சனைகள் மீதான புதிய சட்டங்கள், ஒழுங்குவிதிகள், வழிகாட்டல்களால் நிறுவனம் மட்டுப்படுத்தப்படுதல்.
- சூழல் பாதுகாப்பு மீதான சட்டங்கள்.

***(மொத்தம் 05 புள்ளிகள்)***

aat SRI LANKA

## *வினா 04 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

*அத்தியாயம் 9 - நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு ஒன்றுக்கான தேவைப்பாடுகள்*

**(a) பணிக்கமர்த்தல் நிறைவேற்றுகை அல்லது ஈடுபடுத்தல் செயற்பாட்டின் தரம்**

1 பணிக்கமர்த்தல் குழுக்களின் வேலையின் நோக்கங்களின் விளக்கமொன்றைப் பெறுவதற்கு பணிக்கமர்த்தல் மீது எவ்வாறு பணிக்கமர்த்தல் குழுக்களுக்கு சுருக்கமாக கூறப்பட்டது

2 பிரயோகிக்கத்தக்க பணிக்கமர்த்தல் நியமங்களுடன் இணக்கம் பெறுவதற்கான செய்முறைகள்

3 பணிக்கமர்த்தல் மேற்பார்வை, உத்தியோகத்தர் பயிற்சி பெறல் மற்றும் பயிற்சியளித்தல் செய்முறை.

4 நிறைவேற்றப்பட்ட வேலையை மீளாய்வு செய்தல் முறைகள், செய்யப்பட்ட முக்கியமான தீர்ப்புக்கள் மற்றும் அறிக்கை வழங்கப்பட்ட வடிவம்

5 நிறைவேற்றப்பட்ட வேலை, மீளாய்வின் நேரப்பராமரிப்பு மற்றும் விரிவு என்பவற்றின் பொருத்தமான ஆவணங்கள்

6 அனைத்து கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் என்பவற்றை தற்போதைய நிலையில் பேணுவதற்கான செய்முறைகள்

*(02 புள்ளிகள்)*

**(b) கணக்காய்வு செயன்முறையை மீளாய்வு செய்யும்போது கருத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்**

1 வேலையானது தொழில்சார் நியமங்கள் மற்றும் பிரயோகிக்கத்தக்க சட்டம், ஒழுங்குவிதி தேவைகள் என்பவைகளுக்கு அமைவாக நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பது

2 முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் கூடுதலான பரிசீலனைக்கு எழுப்பப்பட்டுள்ளனவா என்பது

3 பொருத்தமான ஆலோசனைகள் நடைபெற்றுள்ளனவா மற்றும் பெறுபேறான முடிவுகள் ஆவணப்படுத்தப்பட்டு அமுலாக்கப்பட்டுள்ளனவா என்பதை

4 தன்மை, நேரங்கணிப்பு மற்றும் நிறைவேற்றப்பட்ட வேலையின் விலாசம் என்வற்றை திருத்தியமைக்கவேண்டியுள்ளதா என்பதை

5 நிறைவேற்றப்பட்ட வேலை அடையப்பட்ட முடிவுகளுக்கு ஆதாரமாக உள்ளனவா மற்றும் அவை பொருத்தமாக ஆவணப்படத்தப்பட்டுள்ளனவா என்பதை

6 பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகள் அறிக்கைக்கு ஆதாரமாக போதுமானதும் பொருத்தமானதுமானதாகவும் உள்ளனவா என்பதை

7 பணிக்கமர்த்தல் நடைமுறையின் நோக்கங்கள் அடையப்பட்டள்ளனவா என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

*(03 புள்ளிகள்)*
*(மொத்தம் 05 புள்ளிகள்)*

*பகுதி **A** முடிவு*

## *வினா 05 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அத்தியாயம் 8 - நெறிமுறைத் தேவைப்பாடுகள்***

**(a)**

1. **சுய – அக்கறை அச்சுறுத்தல்**

   **நிபந்தனைக்கட்டணம்** - அடுத்த வருடத்தில் இடம்பெறவிருக்கும் தனியார் பணியமர்த்தலில் ஒரு சாத்தியமான முதலீட்டாளரை கண்டறிவதில் வெற்றி பெறுமாயின், கணக்காய்வுக் கட்டணத்தை 20% இனால் அதிகரிப்பதாக முகாமைப் பணிப்பாளர் உடன்பட்டிருத்தல்.

2. **பரிந்து பேசுதல் அச்சுறுத்தல்**

   **கணக்காய்வு வாடிக்கையாளரிடத்தில் பங்குகளுக்கான விளம்ரங்களை மேற்கொள்ளல் -** சுராஜ் அன்ட் கம்பனியின் கணக்காய்வு முகாமையாளர் புதிய பங்கு வழங்கலுக்கான எதிர்கால முதலீட்டாளரை கண்டறிவதாக உடன்பட்டிருத்தல்.

3. **பரிச்சயம் அச்சுறுத்தல்**

   **நீண்டகால உறவு -** சுராஜ் அன்ட் கம்பனி மற்றும் சிரேஷ்ட கணக்காய்வாளர் முறையே 25 வருடங்கள், மற்றும் 6 வருடங்கள் தொடர்ச்சியாக கணக்காய்வில் ஈடுபட்டு வருகின்றனர். FTL உடனான நீண்டகால உறவின் காரணமாக சுராஜ் அன்ட் கம்பனி நிறுவன அக்கறை மீது அதீத அனுதாபங்களை தெரிவிக்க முடியும். அல்லது அவர்களது வேலைகளை செய்துகொடுக்க முடியும்.

   **பரிசு வவுச்சர்களை ஏற்றுக்கொள்ளல் -** நிறுவனத்தின் வெள்ளி விழாவைக் கொண்டாடும் முகமாக கணக்காய்வு அணியிலிருந்த அனைவருக்கும் 5 நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் 2 நாட்கள் தங்குவதற்குவதற்கான ஏற்பாடுகளையும் பரிசு வவுச்சர்களையும் அன்பளிப்புச் செய்திருந்தமை.

***(06 புள்ளிகள்)***

**(b)**

**நிறுவன ரீதியாக அமுல்படுத்தப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள்**

1 அடிப்படைக்கொள்கையுடன் இணங்கவேண்டிய முக்கியத்துவத்தை தலைமைத்துவமானது கட்டாயப்படுத்தல் வேண்டும்

2 அடிப்படைக் கொள்கைகளை இனங்காண்பதற்காக நிறுவப்பட்ட செயன்முறைகளை ஆவணப்படுத்தல், ஒழுங்கான அடிப்படையில் மதிப்பீடு செய்தல் மற்றும் அச்சுறுத்தலிலிருந்து பாதுகாக்க பிரயோகித்தல்.

3 நிறுவனம் குழு உறுப்பினர்கள் சுதந்திரமாக செயற்படுவதற்கான வெளிப்படுத்தலை பெற்றுக்கொள்ளல்

4 குழு உறுப்பினர்களை சுழற்சிமுறையில் மாற்றுவதற்கான கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்

5 பணிக்குரிய தரக்கட்டுப்பாடுகள் மற்றும் மேற்பார்வையினை ஒழுங்கான அடிப்படையில் செயல்படுத்துவதற்கான கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்

6 அடிப்படைக் கொள்கைகளை பின்வற்றுவதற்குத் தேவையான உள்ளக கட்டுப்பாடுகளை விருத்திசெய்தல்.

7 ஒரு தனிப்பட்ட நிறுவனத்திடமிருந்து முதன்முறையான வருமானம் மற்றும் தொடர்ந்து வரும் பணியிலிருந்தான வருமானம் மீதான நம்பிக்கையை கண்காணிப்பதற்கான கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்

8 நிறுவனத்திற்கு வழங்கப்படும் உறுதியுரை மற்றும் உறுதியுரை அற்ற சேவைகளுக்கிடையிலான சுதந்திரத்தன்மையை உறுதிப்படுத்தவதற்கான கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்

9 பணிக்குழு அல்லாத உறுப்பினர் ஒருவர் பொருத்தமற்ற விதத்தில் பணிமீது அல்லது பணி முடிவுகள் மீது செல்வாக்கு செலுத்துவதை தடுப்பதற்கான வழிமுறைகள்

10 நிறுவனத்தின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை குழு உறுப்பினர் அனைவருக்கும் தெரியப்படுத்துதல் மற்றும் விருத்திசெய்தல்.

11 கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கு இணங்கி செயற்படுவதற்கான சீர்திருத்த நடைமுறைகளை அமுல்படுத்தல்

12 நிறுவனத்தில் விசில் பிளோவர் (Whistle blower) கொள்கையினை அமுல்படுத்தல்

*(04 புள்ளிகள்)*
*(மொத்தம் 10 புள்ளிகள்)*

aat SRI LANKA

## *வினா 06 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

| *அத்தியாயம் 8 - நெறிமுறைத் தேவைப்பாடுகள்* |
|---|

### (a) பணிக்கமர்த்தல் நியமனத்தை ஏற்றுக்கொள்ள முன்னரான கணக்காய்வு நடைமுறைகள்

1 செயற்படுவதற்கான தொழில்முறை சார் தகுதிகளை உறுதிப்படுத்தல் -அவர்கள் சட்ட அல்லது நெறிமுறை பின்னணியில் தகுதியற்றவர்களா என்பதை கருத்தில் கொள்க.

2 இருக்கின்ற வழங்கள் போதுமானதா என்பதை உறுதிப்படுத்தல் - கிடைக்கத்தக்க நேரம், உத்தியோகத்தர்கள் மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவம்

3 உசாத்துணை குறிப்புக்களை பெறுக - இயக்குனர்கள் தனிப்பட்ட முறையில் தெரியாதவர்களாயின், சுயாதீனமான விசாரணைகளை மேற்கொள்ளல்

4 தற்போதய கணக்காய்வாளருடன் தொடர்புகொள்ளல் - மாற்றத்திற்கு பின்னால் சூழ்நிலைகளும் காரணங்களும் உண்டா என்பதை விசாரிக்குக. இதனை புதிய கணக்காய்வாளர் ஒரு மரியாதைக்காக தெரிந்து கொள்ள வேண்டும்

*(04 புள்ளிகள்)*

**(b) முதன்மையான நோக்கம்**

கணக்காய்வு ஆவணப்படுத்தலின் முதன்மையான நோக்கமானது, கணக்காய்வின் ஒட்டுமொத்த நோக்கங்களை அடைவது குறித்த முடிவுக்கு அடிப்படையாக அமைந்த கணக்காய்வுச் சான்றுகளை வழங்குவதும், இலங்கைக் கணக்காய்வு நியமங்கள் மற்றும் பிரயோகிக்கத்தக்க சட்ட மற்றும் ஒழுங்கு விதிமுறைத் தேவைப்பாடுகளுக்கேற்ப கணக்காய்வு திட்டமிடப்பட்டு, மேற்கொள்ளப்பட்டது என்பதற்கான சான்றுகளை வழங்குவது ஆகும்.

*(03 புள்ளிகள்)*

**(c) வேலைத்தாள்களின் உள்ளடக்கம்**

1 அகக்கட்டுப்பாடு உள்ளடங்கலாக நிறுவனம் மற்றும் அதன் சூழலை புரிந்துகொள்வதில் பெறப்பட்ட தகவல்கள் பின்வருபவை:

- சட்ட ஆவணங்கள், ஒப்பந்தங்கள் மற்றும் கூட்ட அறிக்கைகள் தொடர்பான தகவல்கள்
- முக்கியமான சட்ட ஆவணங்கள், ஒப்பந்தங்கள் மற்றும் கூட்ட அறிக்கைகளின் பிரித்தெடுத்தல்கள் அல்லது நகல்கள்
- நிறுவனம் செயற்படும் தொழிற்துறை, பொருளாதார சூழல் மற்றும் சட்டச் சூழல் பற்றிய தகவல்கள்
- நிறுவனத்தின் அகக்கட்டுப்பாட்டு கையேட்டின் பிரித்தெடுப்புக்கள்

2 கணக்காய்வுத் திட்டங்கள் மற்றும் அதில் ஏதேனும் மாற்றங்கள் உள்ளிட்ட திட்டமிடல் செயன்முறையின் சான்றுகள்

3 அகக் கணக்காய்வு மற்றும் முடிவுகளின் பணிகளை கணக்காய்வாளர் கருத்தில்கொண்டதற்கான சான்றுகள்

4 ஊடுசெயல்கள் மற்றும் மீதிகளின் பகுப்பாய்வு

5 முக்கிய விகிதங்கள் மற்றும் போக்குகளின் பகுப்பாய்வு

6 அடையாளம் காணப்பட்ட மற்றும் மதிப்பிடப்பட்ட பொருண்மைமிக்க வழுக்கூற்று இடர்

7 கணக்காய்வு நடைமுறைகளின் தன்மை, நேரம், அளவு மற்றும் முடிவுகளின் பதிவு

8 பணி மேற்கொள்ளப்பட்டு மேற்பார்வையிடப்பட்டு மீளாய்வு செய்யப்பட்டமைக்கான சான்றுகள்

9 கணக்காய்வு நடைமுறைகளை யார் செய்தார்கள், அவை எப்போது மேற்கொள்ளப்பட்டன என்பதற்கான குறிகாட்டிகள்

10 மற்றொரு கணக்காய்வாளரால் கணக்காய்வு செய்யப்பட்ட துணை நிறுவனங்கள் தொடர்பாக பிரயோகிக்கப்பட்ட கணக்காய்வு நடைமுறைகளின் விபரங்கள்

*(03 புள்ளிகள்)*

*(மொத்தம் 10 புள்ளிகள்)*

aat SRI LANKA

## *வினா 07 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

*அத்தியாயம் 7 - கணக்காய்வு அறிக்கையிடல்*

**(a) முகாமைத்துவம் மற்றும் ஆளுகைக்கு பொறுப்பளிக்கப்பட்டவர்களுடன் தொடர்பாட வேண்டிய விடயங்கள்**

1 செப்டெம்பர் 2020 தொடக்கம் பெப்ரவரி 2021 வரையான வங்கிக் கணக்கிணக்கக் கூற்று அதிகாரமளிக்கப்பட்ட நபரால் மீளாய்வு செய்யப்படவில்லை. இது காசு மீதான தவறான பிரயோகிப்பதற்கு வழிவகுக்கும். கடந்த வருடத்திலும் இதே அவதானிப்புக்கள் கலந்துரையாடப்பட்ட போதிலும் முகாமையினால் எவ்வித திருத்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாத சந்தர்ப்பத்தில் கணக்காய்வாளரது திருப்திக்காக ஆளுகைக்கு பொறுப்பளிக்கப்பட்டவர்களுடன் தொடர்பாட வேண்டும்.

2 நிறைவேற்று ஊழியரால் தயாரிக்கப்பட்ட சம்பள பட்டியலானது மனிதவள முகாமையாளரால் மீளாய்வு செய்யப்படவில்லை. இது போலியான ஊழியர்களுக்கு கொடுப்பனவு மேற்கொள்ள வழிவகுக்கும்.

3 நிறுவனமானது அலுவலக கட்டடம் எனப்படும் தகுதிவாய்ந்த சொத்தொன்றை நிர்மானித்துள்ளது. இது கடன் மூலம் நிதியிடப்பட்டதுடன் கடனுக்க செலுத்தப்பட்ட வட்டியானது மூலதனச் செலவாக அன்றி வருமானச் செலவாக இலாப நட்ட கணக்கில் பதிவிடப்பட்டுள்ளது. இது பற்றி முகாமைத்துவத்துடன் தொடர்பாட வேண்டியது அவசியமாகும்.

*(04 புள்ளிகள்)*

**(b)**

**கடன் செலவு**

கட்டிடம் மீதான கடன் செலவு – பொருண்மை மட்டத்திலும் அதிகமான வழுக்கூற்றுக்கள் காணப்படுவதால் கணக்காய்வின் மீது குறித்தளவு தாக்கத்தை கொண்டுள்ளது.

LKAS 23 இன் படி, நிறுவனமானது நிச்சயிக்கப்பட்ட எதிர்கால பொருளாதார நன்மையைக் கொண்டுள்ள தகுதிவாய்ந்த சொத்துக்களின் கடன்செலவானது மூலதனச் செலவாக ஏடுகளில் பதியப்படல் வேண்டும்.

அதன்படி, கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு ஏற்பட்ட ரூ. 5 மில்லியன் கடன் செலவு ஒரு பொருண்மை வழுக்கூற்றாகும். இது பொருண்மை மட்டமான 0.9 மில்லியனுக்கு மேலதிகமாக காணப்படுவதாலும் , முகாமை நிதிக்கூற்றக்களில் திருத்தங்களை மேற்கொள்ள மறுக்கும் சந்தர்ப்பத்தில் நிதிக்கூற்றக்களுக்கான தாக்கத்தினை மதிப்பீடு செய்ய வேண்டும்.

31 மார்ச் 2021 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபத்தினை குறைததுக் காட்டுகின்ற மொத்த திருத்தப்படாத வழுக்கூற்றுக்கள் ரூ. 5 மில்லியன் ஆகையால் முழுமையான நிதிக்கூற்றுக்களில் பொருண்மை வாய்ந்ததாகும். கணக்காய்வாளர், நிதிக்கூற்றுக்களின் மீதிகளை திருத்துவதற்காத திருத்தப்படாத கணக்காய்வு வேறுபாடுகளை முகாமைத்துவம் மற்றும் ஆளுகைக்கு பொறுப்பளிக்கப்பட்டவர்களுடன் தொடர்பாடலை மேற்கொள்ள வேண்டும். முகாமை உடன்படவில்லையெனில் கணக்காய்வாளர் கணக்காய்வு அபிப்பிராயத்தின் மீதான தாக்கத்தை மதிப்பீடு செய்தல் வேண்டும்.

*(06 புள்ளிகள்)*
*(மொத்தம் 10 புள்ளிகள்)*

*பகுதி **B** முடிவு*

aat SRI LANKA

## வினா 08 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

### அத்தியாயம் 3 - உள்ளகக் கட்டுபாட்டு செய்முறைகள் மற்றும் வணிக செய்முறைகள்

| கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் | உதாரணம் | பரிந்துரைகள் (b) |
|---|---|---|
| கடமைகள் பகிர்வு | ▪ கையேட்டு வரவு இடாப்பினை அடிப்படையாகக் கொண்டு மாதாந்த சம்பள பட்டியலை தயாரிப்பதுடன் தேவையான திருத்தங்களையும் மனிதவள உதவியாளர் மேற்கொள்கின்றமை.<br>▪ வேலைப்பட்டியல் மற்றும் தொழிற்சாலை வெளியீடுகளை தொழிற்சாலை மேற்பார்வையாளர் தயாரித்தல்.<br>▪ சம்பள மாற்றங்களை பதிவிடுதல் மற்றும் பொதுநாட்குறிகப்பிலான மாற்றங்கள் கணக்கீட்டு நிறைவேற்று ஊழியரால் மேற்கொள்ளப்படுகின்றது.<br>▪ சம்பளம் தொடர்பான பதிவுகள் ஏடுகளில் கணக்கீட்டு நிறைவேற்று ஊழியரால் மேற்கொள்ளப்படுகின்றது. | ▪ வருகையினை பதிவு செய்வதற்கு கைரேகை பதிவு இயந்திரத்தை நுழைவாயிலில் நிறுவுதல்.<br>▪ மனிதவள உதவியாளரால் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களை மனிதவள முகாமையாளர் அனுமதியளித்தல்.<br>▪ சம்பள பதிவுகள் நிதி முகாமையாளரின் அனுமதியுடன் பதிவு செய்யப்படல் வேண்டும். |
| பௌதீக கட்டுப்பாடுகள் | ▪ சம்பள பதிவேடுகள் நிதித்துறையின் பொதுவான இடத்தில் வைக்கப்பட்டிருத்தல்.<br>▪ ஊழியர் வரவுப்பதிவுகள் நிதித்துறையின் பொதுவான இடத்தில் வைக்கப்பட வைக்கப்பட்டிருத்தல். | ▪ சம்பள பதிவேடுகள் சரியான பாதுகாப்பான இடத்தில் வைத்தல் வேண்டும்.<br>▪ வருகையினை பதிவு செய்வதற்கு கைரேகை பதிவு இயந்திரத்தை நுழைவாயிலில் நிறுவுதல். |
| அதிகாரத்துவமும் அங்கீகாரமும் | ▪ சம்பளம் தொடர்பான பதிவுகள் ஏடுகளில் கணக்கீட்டு நிறைவேற்று ஊழியரால் மேற்கொள்ளப்படுகின்றது.<br>▪ சம்பளப்பட்டியல் திருத்தங்கள் மனிதவள உதவியாளரால் மேற்கொள்ளப்படுகின்றது. | ▪ பொதுப்பேரேட்டுக்கான மாற்றங்கள் சரியான அதிகாரமளிக்கப்பட்ட நபரால் அனுமதிக்கப்படல் வேண்டும்.<br>▪ சம்பளப்பட்டியல் திருத்தங்கள் மனிதவள உதவியாளருக்கு மேலான பதவிலுள்ள சரியான அனுமதியளிக்கப்பட்ட நபரால் செய்யப்பட வேண்டும். |

*a- (06 புள்ளிகள்)*
*b- (03 புள்ளிகள்)*

aat SRI LANKA

**(c)**

**1. சொத்துகளை பாதுகாத்தல் மற்றும் மோசடிக்கான சந்தர்ப்பங்ளை குறைத்தல்**

போதுமான கட்டுப்பாடுகளை அமுல்படுத்துவதன் மூலம் களவு, தவறாகப் பயன்படுத்துதல் விபத்துக்குள்ளாகி அழிவடைதல் என்பவற்றிலிருந்து பொதீக சொத்துக்களை பாதுகாத்தல். சில உள்ளக கட்டுப்பாடுகள் எதிர்கால வழுக்கள் ஏற்படாமல் தடுக்கும்.

**2. செயற்பாட்டில் வினைத்திறன் மற்றும் விளைதிறனை அதிகரித்தல்**

வினைத்திறனான கட்டப்பாடுகள் வளங்களை வினைத்திறனாகவும் விளைதிறனாகவும் பயன்படுத்தி நிறுவன இலக்குகளை அடைவதற்கு உதவும்.

**3. நிதி அறிக்கைகளின் நேர்மை மற்றும் நம்பகத்தன்மையை அதிகரித்தல்.**

பங்குதாரர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் முகாமையின் கடைமை ஆகும். உறுதியான உள்ளக்கட்டுப்பாடானது அத்தகைய நிதிக்கூற்று பாவனையாளர்களுக்கான தகவல்களின் நம்பகத்தன்மையை அதிகரிக்க உதவும்.

**4. சட்டங்கள் மற்றும் சட்ட ஒழுங்குகளுக்கு இணங்கி நடப்பதை உறுதி செய்தல்**


நிறுவனமானது நிதிக்கூற்றுக்களுடன் நேரடியாக தொடர்புபடுகின்ற சட்டங்கள் மற்றும் சட்ட ஒழுங்குகளுக்கு இணங்கி நடத்தல் வேண்டும். இணங்கவில்லை எனில் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவில் பாதிப்பை ஏற்படுத்தலாம்

**5. மேற்பார்வை நடவடிக்கைகளை அமுல்படுத்தல்**

அமுல்படுத்தப்பட்ட உள்ளக கட்டுப்பாடுகளின் இடைவெளியை அடையாளம் காண முடியும். மேலும் நிறுவனத்தின் அனைத்து செயற்பாடுகளின் வினைத்திறனையும் மேற்பார்வை செய்ய முடியும்.

***(06 புள்ளிகள்)***

**(d) சம்பளப்பட்டியல் செயல்முறை**




***(04 புள்ளிகள்)***

**(e) நிகழ்ச்சி நிரலில் அங்கிகாரமற்ற மாற்றங்களைத் தவிர்த்தல் அல்லது கண்டுபிடிப்பதற்கான கட்டுப்பாடுகள்**

1 கடைமைகளை பாகுபடுத்தல்

2 தகவல் அணுகுதலை கணணி செயற்பாட்டு உத்தியோகத்தர்கள் மட்டும் என வரையறுக்கப்பட்ட வகையில் நிகழ்ச்சி நிரல்களுக்கு கடவுச் சொல் பாதுகாப்பு.

3 மத்திய கணணி முறைமையை அணுகுவதற்கான அனுமதியை முற்றிலும் மூடப்பட்ட பாதுகாப்புமுறை மூலம் தடைசெய்தல்

4 மென்பொருள் மீதான கணணி வைரஸ் பரிசோதனை.

5 கணணி வைரஸ் நிரலுக்கு எதிரான மென்பொருள் பாவனை மற்றும் அங்கீகரிக்கப்படாத நிரல்கள் அல்லது கோவைகளின் பயன்பாட்டை தடைசெய்தல்

6 எடுக்கப்படுகின்ற நிரல்களின் காப்பு பிரதிகள் மற்றும் அவற்றை வேறு இடங்களில் களஞ்சியப்படுத்தல்.

**கோப்புகளில் அங்கீகாரமற்ற மாற்றங்களைத் தவிர்த்தல் கட்டுப்பாடுகள்**

1 தொலைநிலை முனையங்களின் பௌதீக பாதுகாப்பு

2 அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களுக்கு வரையறுக்கப்பட்ட அணுகல்

3 தடைச்சுவர்கள்

4 கடவுச்சொற்கள் போன்ற பயனர் அடையாளக்கட்டுப்பாடுகள்

5 தரவு குறியாக்கம்

*(06 புள்ளிகள்)*

*(மொத்தம் 25 புள்ளிகள்)*

aat SRI LANKA

## *வினா 09 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

*அத்தியாயம் 06 - கணக்காய்வுச் சான்றுகள்*

**(a) மேலதிக கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளல்**

- ஆதனம், பொறி, மற்றும் உபகரணம்
- வியாபார வருமதிகள்
- வங்கிக் கடன்
- வியாபார சென்மதிகள்
- இருப்பு
- செலுத்தவேண்டிய ஏனைய செலவுகள்
- வருமானம்
- செலவுகள்

*(05 புள்ளிகள்)*

**(b) கணக்காய்வு செய்முறைகள்**

| செய்முறைகள் | உதாரணம் |
|---|---|
| அவதானம் | • பொதீக இருப்பு உறுதிப்படுத்தலை அவதானித்தல்<br>• உரிமத்தின் உள்ளக கட்டுபாடுகளின் பயனுறுதி மிக்க பிரயோகத்தினை உறுதி செய்வதற்காகக் கட்டுப்பாடுகளை அவதானித்தல் |
| பரிசோதனை | • உள்ளக ரீதியாக நிதிக்கூற்றில் காட்டப்படும் காசேட்டின் படியான வங்கி மீதியினை உறுதி செய்யும் வங்கி இணக்கக் கூற்றிலுள்ள மீதியை உறுதிப்படுத்துவதற்கான ஒரு வங்கிக் கூற்றின் பரிசோதனை.<br>• நிபந்தனைகள் மற்றும் மீள்செலுத்துகை விபரங்களை உறுதிசெய்வதற்காக ஓர் வங்கிக்கடன் ஒப்பந்தத்தை பரிசோதித்தல்.<br>• சரியான வாடிக்கையாளருக்கே பட்டியலிடப்பட்டுள்ளதுடன் கணக்கேடுகளில் சரியான தொகைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதை உறுதிசெய்வதற்காக விற்பனை பட்டியலைப் பார்வையிடல்.<br>• வணிக நிறுவனத்துக்கு சொந்தமான காணி ஒன்றின் பத்திரத்தினை பார்வையிடல். |
| மீள்கணித்தல் | • மீள்கணித்தல் என்பது ஆவணங்கள் அல்லது பதிவுகளின் கணிதரீதியான துல்லியத்தன்மையினை உறுதி செய்தலாகும். மீள்கணித்தலானது கையேட்டு முறையிலோ அல்லது இலத்திரனியல் முறையிலோ மேற்கொள்ளப்படலாம் . |
| மீள்செயன்முறை | • வங்கி இணக்கக் கூற்றுக்களின் மீள்செயன்முறை.<br>• தனித்தனியான வழங்குனர் மீதிகளை அவர்களது கூற்றுக்களுடன் இணக்கம் செய்தல்.<br>• கடன்பட்டோரது உப பேரேட்டு மீதிகளை கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு மீதிகளுடன் இணக்கம் செய்தல் |
| புற உறுதிப்படுத்தல்கள் | • கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் உறுதிப்படுத்தல்கள்<br>• நடைமுறைக்கணக்கு, முதலீடுகள் மற்றும் கடன்கள் முதலியவற்றின் மீதிகளுக்கான வங்கி உறுதிப்படுத்தல்கள். |

| | |
|---|---|
| | • மூன்றாம் தரப்பினரால் வைத்திருக்கப்படும் இருப்புக்களுக்கான உறுதிப்படுத்தல்<br>• சட்ட ஆலோசகரிடம் இருந்தான உறுதிப்டுத்தல்கள். |
| பகுப்பாய்வு நடைமுறைகள் | • முன்னைய காலத்துக்கான ஒப்படத்தக்க தகவல்கள்<br>• பாதீடுகள் மற்றும் முற்துணிவுகள் போன்ற எதிர்வுகூறப்பட்ட பெறுபேறுகள்<br>• ஒத்த தொழிற்துறைத் தகவல்கள் |

*(06 புள்ளிகள்)*

**(c) ஆதனம் பொறி உபகரணங்களுக்கான கணக்காய்வுச் செயன்முறைகள்**

1 ஆதனம் பொறி உபகரணங்களின் பதிவேட்டிலிருந்து மாதிரிகளை தெரிவுசெய்து அவற்றின் பௌதீக இருப்பினை உறுதிப்படுத்துவதற்கான பௌதீக ரீதியான பரிசோதனை ஒன்றை மேற்கொள்ளல்.

2 ஆதனம் பொறி உபகரணங்களுகளுடன் தொடர்பான விபரங்கள் மற்றும் ஆவணங்களை மதிப்பீடு செய்தல்

3 மூலதனமாக்கல் கிரயத்தின் துல்லியத்தன்மையை LKAS இற்கு அமைவாக சரிபாத்தல்

4 நிறுவனத்தின் பெறுமானத்தேய்வு முறைகளை மதிப்பிடுவதன் மூலம் பிரயோகிக்கத்தக்க கணக்கீட்டு நியமங்களுக்கமைவானதா என்பதை உறுதிப்படுத்தல்

5 நிறுவனத்தினால் மதிப்பிடப்பட்ட ஆதனம் பொறி உபகரணங்களின் பாவனைக்காலம் நியாயமானது என்பதை பரீட்சித்தல்

உ-ம் : நிறுவன நியமங்களுடன் ஒப்பீடு செய்தல் தொழில்வாண்மைத் தீர்மானம் மிகவும் அவசியம்.

6 ஆதனம் பொறி உபகரணங்களின் பெறுமானத்தேய்வினை மதிப்பீடு செய்து மீள்மதிப்பீட்டின் பெறுபேறுகளை நிறுவனத்தின் கிரயத்துடன் ஒப்பீடு செய்தல்

7 ஆதனம் பொறி உபகரணங்களின் மாதிரிகளை தெரிவுசெய்து அவற்றின் ஆவணங்களின் தலைப்பை பரீட்சிப்பதன் மூலம் நிறுவனத்தின் உரிமையை உறுதிப்படுத்துதல்.

8 பாதுகாப்பு நோக்கத்திற்காக சொத்து உறுதிகளை வைத்திருக்கும் சட்டத்தரணிகள் மற்றும் நிதியாளர்களிடமிருந்து உறுதிப்படுத்தலைப் பெற்றுக்கொள்ளல்.

9 மதிப்பீடு செய்யப்பட்ட பாவனைக்காலத்தின் நியாயத்தன்மையை உறுதிப்படுத்தல்

10 வருடத்திற்கான சேர்ப்பனவுகள் அங்கீகரிக்கப்பட்ட அளவுகோல்களை எட்டியுளதை மதிப்பீடு செய்தல்

11 ஆதனம் பொறி உபகரணங்களுக்கான கணக்கீட்டு கொள்கைகளின் நியாயத்தன்மையை மதிப்பீடு செய்தல்

12 சேர்ப்பனவுகள் மற்றும் அகற்றல்களுக்கான இயக்குனர்சபை அனுமதிகளை பரீட்சித்தல்.

*(05 புள்ளிகள்)*

aat SRI LANKA

**(d) தொடர்புடைய கட்சியினருக்கான கணக்காய்வுச் செயன்முறைகள்**

1 தொடர்புடைய கட்சியினருக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்கள் நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்களை மேற்கொண்டுள்ளதா என முகாமையிடம் விசாரணை செய்தல்.

2 தொடர்புடைய கட்சியினரின் பெயர்களை தெரிந்துகொள்ள கடந்தவருட வேலைத் தாள்களை மீளாய்வு செய்தல்

3 பங்குதாரர்கள் மற்றும் இயக்குனர் சபையின் கூட்ட அறிக்கைகள் மற்றும் இயக்குனர் நலன்களின் பதிவேடுகள் போன்ற சட்டமூல பதிவேடுகளை மீளாய்வு செய்தல்

4 நிதியாண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட பெரியளவிலான மற்றும் அசாதாரண கொடுக்கல்வாங்கல்கள் மீதிகளை தெரிந்துகொள்ள கணக்கீட்டு பதிவுகளை மீளாய்வு செய்தல்.

5 வங்கி உறுதிப்படுத்தல்கள் மற்றும் கடன் கொடுப்பனவுகள் பெறுவனவுகளுக்கான உறுதிப்படுத்தல்களை மீளாய்வு செய்வதன் மூலம் உறவுகளையும் நிறுவனத்திற்கு உத்தரவாதமளித்தவர்களையும் இனங்காண முடியும்

6 முதலீட்டு கொடுக்கல்வாங்கல்களை மீளாய்வு செய்தல். உதாரணமாக கூட்டுமுயற்சி நிறுவனம் அல்லது ஏனைய நிறுவனங்களின் முதலீடுகளின் கொள்வனவு விற்பனை.

7 ஓய்வுபெற்றவர்களின் பெயர்கள் மற்றும் ஏனைய ஊழிய நலனுக்காக விரிவுபடுத்தப்பட்ட நம்பிக்கை நிதியங்களை விசாரணை செய்வதன் மூலம் பெயர்களை தெரிந்துகொள்ள முடியும்.

8 இயக்னுகுனர்களுடன் இணைந்தவைகள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் அதிகாரிகளை விசாரணை செய்தல்

9 முதன்மை பங்குதாரர்களை தீர்மானிக்க பங்கு நலன் பதிவேட்டினை மீளாய்வு செய்தல்.

10 தற்போதைய கணக்காய்வில் ஈடுபட்டுள்ள ஏனைய கணக்காய்வாளர்கள், முன்னைய கணக்காய்வாளர்களை விசாரிப்பதன் மூலம் தொடர்புடைய கட்சியினரை தெரிந்து கொள்ளல்

11 தொடர்புடைய கட்சியினரின் இருக்கைக்கு சான்றாக ஒழுகாற்று நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட தகவல்கள் மற்றும் வரிக் கோப்பினை மீளாய்வுசெய்தல்

12 தொடர்புடைய கட்சியினரின் இருக்கைக்கான குறியீடாக சட்டத்தரணிகளால் வழங்கப்பட்ட விலைப்பட்டியலையும் அதற்கான சான்றினையும் மீளாய்வு செய்தல்.

***(05 புள்ளிகள்)***

SRI LANKA

**(e)**

***அத்தியாயம் 7 - கணக்காய்வு அறிக்கையிடல்***

கணக்காய்வாளர் அறிக்கையில் வலியுறுத்தப்பட்ட விடயங்களுக்கான பந்திகள்

1 ஏதிர்காலத்தில் ஏற்படக்கூடிய விலக்களிக்கப்பட்ட வழக்குகள் அல்லது ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பான நிச்சயமற்ற தன்மை

2 நிதிக்கூற்றுக்களின் திகதி மற்றும் கணக்காய்வாளர் அறிக்கையின் திகதிகளுக்கு இடையில் நிகழும் குறிப்பிடத்தக்க தொடர்ச்சியான நிகழ்வு.

3 நிதிக்கூற்றுக்களின் பொருட்டு விளைவினை ஏற்படுத்தக்கூடிய புதிய கணக்கீட்டு நியமம் ஒன்றின் ஆரம்ப பிரயோகம்

4 நிறுவனத்தின் நிதியியல் நிலமையில் குறிப்பிடத்தக்க விளைவினை ஏற்படுத்தும் ஒரு கேடான விளைவு அல்லது தொடர்ச்சியான நிலையிலிருத்தல்.

***(04 புள்ளிகள்)***

***(மொத்தம் 25 புள்ளிகள்)***

aat SRI LANKA

***பகுதி C முடிவு***

## *Notice:*

These answers compiled and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.
These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers". The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designed especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2021 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka). All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*